**செய்தி வெளியீடு எண்: 644** **நாள் :20.12.2014**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் சார்பில் முனைவர் கு.மோகனராசு அவர்களின் இருபதாம் நூற்றாண்டுத் திருக்குறள் ஆய்வுகள் (இந்திய விடுதலைக்கு முன்) நூல் வெளியீட்டு விழா – திருவள்ளுவர் ஆண்டு 2045, ஜய, மார்கழி 4 (19.12.2014) வெள்ளிக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது. திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடப் பொறுப்பாளர் முனைவர் து. ஜானகி அவர்கள் வரவேற்புரை ஆற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரையாற்றினார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் முன்னிலை வகிக்க மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.சி.வீரமணி அவர்கள் நூலை வெளியிட்டு பின்வருமாறு சிறப்புரையாற்றினார்.

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என வாழ்ந்துவரும் மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் வளர்ச்சிப் பணிக்காக பல திட்டங்களை வழங்கியுள்ளார். புதிய கட்டடம் கட்டுவதற்கு, பல திட்டப்பணிகள், பல கருத்தரங்குகள் நடத்துவதற்கு நிதி நல்கியுள்ளார். குறிப்பாக திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம், தொல்காப்பிய ஆய்விருக்கை, உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மையம், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம், ஓலைச் சுவடி பாதுகாப்பு மையம், மொழி ஆராய்ச்சிக் கூடம், கலைச்சொற் களஞ்சிய உருவாக்கம் என கோடிக்கணக்கான ரூபாய்களில் பல தமிழ் வளர்ச்சி பணிகளுக்கு வழிவகை செய்துள்ளார்.

திருவள்ளுவரின் பெருமைகளை உலகறியச் செய்திட உலகச் செம்மொழிகளின் வரிசைக்குட்பட்ட அரபு, சீனம் மொழிகளில் மொழிபெயர்த்திடச் செய்திட்டார். திருவள்ளுவரின் திருநூலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் தமிழறிஞர்களுக்குப் பல விருதுகளையும், மாணவர்கள் மனதில் திருக்குறளைப் பொதியச் செய்திட ஆண்டுதோறும் 36 பேருக்குத் திருக்குறள் முற்றோதல் பரிசாக ரூ.10,000/– வழங்கச் செய்துள்ளார்.

உலக மக்கள் அனைவரையும் வள்ளுவத்தின் வழி வாழ்ந்திட அறிவுறுத்தும் வகையில் வள்ளுவரின் ''கண்ணோட்டம் உள்ளது உலகியல்'' என்பதற்கேற்ப திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தை 23.12.2013 அன்று தொடங்கி வைத்தார். இக் காட்சிக் கூடத்தில் 1500க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்கள், வள்ளுவர் சிலைகள், புகைபடங்கள், பாமரர்களும் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையில் ஒலி–ஒளி காட்சித் தொடுதிரை, ஓலைச்சுவடிகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. பல்வேறு நாடுகளிலிருந்தும் திருக்குறள் ஆர்வளர்கள் இக் காட்சிக் கூடத்தை கண்டு அரியதொரு தமிழ்த் தொண்டு என பதிவு செய்துள்ளனர். குறிப்பாக இது காட்சிக் கூடமாக மட்டுமல்லாமல் பல ஆய்வுகள் செய்வதற்கு உரிய ஆராய்ச்சிக்கூடமாகவும் செயற்பட்டு வருகிறது.

இதன் தொடக்கமாகப் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு அவர்களின் இருபதாம் நூற்றாண்டுத் திருக்குறள் ஆய்வுகள் (இந்திய விடுதலைக்கு முன்) என்னும் ஆய்வு நூல் வெளியிடுவதில் நிறுவனம் பெருமைப்படுகிறது. காரணம் ஆசிரியர் சென்னை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், திருக்குறள் உயராய்வு இருக்கையின் பொறுப்பாசிரியராகவும், திருக்குறள் ஆய்வு மையத்தின் தலைவராகவும் பணியேற்று திருக்குறள் தொடர்பான பல ஆய்வுகள் செய்து உலகறியச் செய்துள்ளார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்குறள் மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்தி, கலந்துக் கொண்டு பல புதிய திட்டங்களை உருவாக்கி அவற்றைத் தொகுத்து 125க்கும் மேற்பட்ட நூல்களை உலகிற்கு வழங்கியுள்ளார். இவரது திருக்குறளின் பணியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு பல விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது. ''தோன்றின் புகழோடு தோன்றுக'' என்னும் வள்ளுவரின் கூற்றை மெய்ப்பித்து வாழ்ந்துவரும் இவ்வாசிரியரின் நூல் மிகவும் சிறப்புடையது. இந்நூல் இந்திய விடுதலைக்கு முன் வெளிவந்திருக்கின்ற, நாம் காண்பதற்கு அரிய, இன்று எங்கும் கிடைத்திடாத, பல அரிய கருத்துக்கள் அடங்கிய பொக்கிசங்களான ஐம்பது நூல்களைத் திரட்டி தரவுகளாக்கி, அவற்றை நுணுகி ஆராய்ந்து சமூக, அரசியல், பொருளாதார கூறுகளாக வகைப்படுத்தி வள்ளுவத்தின் மேன்மையினைச் சிறப்பித்துள்ளார். மேலும் வள்ளுவரின் குடி, பிறப்பு, வளர்ப்பு போன்ற செய்திகளையும், வரலாற்று முறையில் ஆராய்ந்து விளக்கியிருப்பது சிறப்பு.

இதுபோன்ற பல நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெளியிட நூலாசிரியரை உளமாக வாழ்த்துகிறேன்.

நூலினைப் பெற்றுக் கொண்ட தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இஆப அவர்கள் பின்வருமாறு வாழ்த்துரை வழங்கினார்.

''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்னும் திருவள்ளுவரின் திருவாக்கிற்கு இணங்க செயலாற்றி வரும், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 23.12.2013 அன்று திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் தொடங்கப்பெற்றது. இது காட்சிக் கூடமாக மட்டுமல்லாமல் பல ஆய்வுகள் செய்வதற்கு உரிய ஆராய்ச்சிக்கூடமாகவும் செயற்பட்டு வருகிறது. இதன் தொடக்கமாகப் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு அவர்களின் ''இருபதாம் நூற்றாண்டுத் திருக்குள் ஆய்வுகள் (இந்திய விடுதலைக்கு முன்)'' என்னும் ஆய்வு நூல் வெளிவந்திருக்கிறது.

இந்நூல் ஆசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், திருக்குறள் ஆய்வு இருக்கையில் பொறுப்பாளராகவும் பணியேற்று, திருக்குறள் ஆய்வுகள், திருக்குறள் பரப்புதல், திருக்குறள் வாழ்வியல் ஆக்கல் என்ற

மூன்று நிலைகளிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளார். இவர் நாற்பதுக்கும் மேற்பட்ட திருக்குறள் மாநாடுகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வரங்குகளிலும் பங்கேற்று 800க்கும் மேற்பட்ட திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். இவை 125க்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 1990இல் உலக திருக்குறள் மையம் நிறுவி அதன் சார்பாக நூற்றிற்கும் மேற்பட்ட திட்டங்களை உருவாக்கி நாடு முழுவதும் திருக்குறள் சிறப்புகளைப் பரப்பி வருகிறார். இவரது திருக்குறளின் பணியைப் பாராட்டி 1997இல் தமிழ்நாடு அரசு இவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கி சிறப்பித்தது. பல்கலைக்கழகத்தில் தாம் வெளியிட்ட திருக்குறள் ஆய்வு நூலுக்காக மாண்பமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருக்கரத்தால் முதல் பரிசும் பெற்றுள்ளார். இவர் எழுதிய பத்து நூல்கள் தமிழ் முதுகலை மற்றும் தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்புகளுக்குப் பாடநூல்களாக இருந்துள்ளன. இத்தகைய சிறப்புடைய ஆய்வறிஞரின் நூல் வெளியிடுவதில் இந்நிறுவனம் சிறப்படைகிறது.

இந்நூல், இந்திய விடுதலைக்குமுன் வெளிவந்த திருக்குறள் தொடர்பான திறனாய்வு நூல்களைச் சேகரித்து அவற்றை ஆய்வு செய்து இலக்கணம், இலக்கியம், சமுதாயம், சமயம், ஒப்பீடு மற்றும் பல துறை சார்ந்த கருத்துகளின் அடிப்படையில் வகைப்படுத்தி ஆய்வு செய்து அவற்றின் சிறப்பு அம்சங்களை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. இவை மட்டுமன்றித் திருவள்ளுவர் தொடர்பான ஆய்வுகளைத் தனித்து ஆராய்ந்து வள்ளுவரின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளது. திருக்குறளின் முதற்பெயர் ‘முப்பால்’, திருவள்ளுவர் பெண்ணுரிமைச் சிந்தனையாளர், சமயப் பொதுமையாளர், உலக உணர்வாளர் போன்ற ஆய்வு முடிவுகள் இந்திய விடுதலைக்கு முற்பட்ட ஆய்வு நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை, இந்நூல் முறைப்படி பதிவு செய்கிறது.

அக்காலப் பகுதியில், வெளிப்படுத்தப்பட்டுள்ள தவறான ஆய்வு முடிவுகளைத் தக்க சான்றுகளுடன் மறுத்துரைப்பதாகவும் இந்நூல் அமைகின்றது.

‘‘குணம்நாடி, குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்’’

என்னும் திருவள்ளுவர் வாக்கு, இந்நூலில் ஊடுபொருளாகி உள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவள்ளுவரின் பெருமைகளை உலகறியச் செய்திட உலகச் செம்மொழிகளின் வரிசைக்குட்பட்ட அரபு, சீனம் மொழிகளில் மொழிபெயர்த்திடச் செய்திட்டார். திருவள்ளுவரின் திருநூலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் தமிழறிஞர்களுக்குப் பல விருதுகளை வழங்கிடச் செய்துள்ளார். மாணவர்கள் மனதில் திருக்குறளைப் பொதியச் செய்திட ஆண்டுதோறும் 936 பேருக்குத் திருக்குறள் முற்றோதல் பரிசாக ரூ.10,000/– வழங்கச் செய்து வள்ளுவத்தை வளர்த்து வருகிறார்.

மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், பல கோடிக்கணக்கான தமிழாய்வு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறார். குறிப்பாகத் திருக்குறள் ஓவியக்காட்சிக் கூடம் தொடங்கச் செய்திட்டார். இக்காட்சிக் கூடத்தின் நோக்கமாக இன, மொழி, சமயம் கடந்த உலகப் பொதுமறை திருக்குறளை உலக மக்கள் அனைவரும் படித்து அறிந்து நல்வாழ்வு பெறும் வகையில் அதன் சிறப்புகளை விளக்கும் செய்திகளைக் காட்சிப்படுத்திவருகிறது.

கூடத்தின் சிறப்பம்சமாக, திருக்குறள் ஓவியங்கள், திருக்குறள் தொடர்பான படக் காட்சிகள், குறும்படங்கள் மற்றும் உயிரூட்டுப்படங்கள், திருக்குறள் கல்வெட்டுப் படி, ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, இலத்தீன், மணிப்பூரி, தெலுங்கு, மலையாளம், வங்காளி ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு நூல்கள், திருக்குறள் ஆராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் கதைகள், நாடக நூல்கள், திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், திருக்குறள் ஓவிய நூல்கள், திருக்குறள் ஒப்பாய்வு நூல்கள், திருக்குறள் சிறப்புப் பற்றி அறிஞர்களின் கருத்துகளடங்கிய நூல்கள், திருக்குறள் அகராதிகள், திருவள்ளுவ மாலை, திருக்குறள் இசை நூல்கள், குறுந்தகடுகள், பல்வேறு ஊர்களில் உள்ள திருவள்ளுவர் புகைப்படங்கள், சிலைகள், திருக்குறள் வழி நூல்கள் என மொத்தம் 1500க்கும் மேற்பட்ட நூல்கள் சேகரித்துக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 100க்கும் மேற்பட்ட திருக்குறள் வலைத்தள முகவரிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களின் திருக்குறள் மேற்கோள்கள் சேகரித்துப் பட்டியலிடப்பட்டுள்ளன. பாமரர்களும் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையில் ஒலி–ஒளி காட்சித் தொடுதிரை, ஓலைச்சுவடி ஆகியன இடம்பெற்றுள்ளன.

இக்காட்சிக் கூடத்தின் வழி அம்மா அவர்களின் நோக்கம் நிறைவேறியுள்ளது. எவ்வாறெனில் பல நாடுகளிலிருந்தும் குறிப்பாகக் கனடா, வாஷிங்டன், இலங்கை, இலண்டன், ஜெர்மன் போன்ற நாடுகளிலிருந்து பார்வையாளர்கள் திருக்குறள் ஆர்வளர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் காட்சிக் கூடத்தைக் கண்டு பயனடைந்து காட்சிக் கூடத்தை அமைப்பதற்கு உதவிய அம்மா அவர்களுக்கு நன்றியைப் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளனர்.

உலகத் திருக்குறள் மைய நிறுவனர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் ஆராய்ச்சியுரை வழங்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தனி அலுவலர் திரு. தா. மார்டின் செல்லதுரை அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் பேராசிரியப் பெருமக்களும் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் உயராய்வு மாணவர்களும் கலந்துக்கொண்டார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**